DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | மீரா |
| Father's Name | கோவிந்தராஜ் |
| Village | ஆலங்காயம் |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | VAO, ஆலங்காயம் |
| Age | 31 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **19.08.2025**

**O.S. No.24/2017 வா.சா.2**

**முதல் விசாரணை**

1. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை என்னுடன் எடுத்து வந்துள்ளேன். ஆலங்காய வருவாய் கிராம பழைய சர்வே எண்385/1A1 அதில் தற்போதைய புதிய சர்வே எண்.385/33, 385/59 சிட்டாவின்படி முன்னதாக சுப்பிரமணி மனைவி சாந்தி என்பவர் பெயரில் இருந்தது அதன் விஸ்தீரணம் சர்வேஎண்.385/33 – 21 சதுர மீட்டர், 385/59 – 15 சதுரமீட்டர் மற்றும் அதன் பட்டா எண்.450 என பதிவேட்டில் உள்ளது.

**(மேற்படி ஆலங்காய வருவாய் கிராம பழைய சர்வே எண்385/1A1 அதில் தற்போதைய புதிய சர்வே எண்.385/33, 385/59 சிட்டாவின் உண்மை நகல் 3ம் தரப்பினர் சான்று ஆவணம் Ex.X1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி சிட்டாவில் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்த விண்ணப்ப எண்.RTR.937/1416 பசலி தேதி குறிப்பிடவில்லை. மேற்படி பட்டா பெயர் மாற்றம் குறித்து துறை ரீதியான நடவடிக்கைகள் குறித்து எந்த குறிப்பும் இல்லை. நான் எடுத்துவந்துள்ள மேற்படி Ex.X1–ல் மண்டல துணைவட்டாட்சியர் கையொப்பம் செய்திருக்கிறார், தேதி குறிப்பிடவில்லை.

2. நான் கொண்டுவந்துள்ள அடங்கல் பதிவேட்டில் சர்வே எண்.385/59–ல் விஸ்தீரணம் 15 சதுரமீட்டர் சாந்தி என்பவர் பெயரில் இருந்து வசந்தா பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, ஆனால் தேதி குறிப்பிடவில்லை. அது சம்மந்தமான பெயர் மாற்றம் குறித்து விண்ணப்ப எண்.RTR.816/1416 என்று குறிப்பிட்டுள்ளது, ஆனால் தேதி குறிப்பிடவில்லை. எந்த அதிகாரி அதை அங்கிகரித்தார் என பெயர் எதுவும் குறிப்பிடவில்லை, கையொப்பம் மட்டும் செய்யப்பட்டுள்ளது. **(மேற்படி சர்வே எண்.385/59 சம்மந்தப்பட்ட அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் 3ம் தரப்பினர் சான்று ஆவணம் Ex.X2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. மேற்படி பட்டா மாற்றம் செய்ததுக் குறித்து மனுவின் நகல் ஏதேனும் கொண்டுவந்துள்ளேனா என்றால் அது எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதில்லை, வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் இருக்கும்.

**குறுக்கு விசாரணை:–**

சர்வே எண்.385/33 – 21 சதுர மீட்டர், 385/59 – 15 சதுரமீட்டர் மற்றும் அதன் பட்டா எண்.450 தற்பொழுது குணசேகரன் மனைவி வசந்தா பெயரில் உள்ளதா என்றால் சரிதான்.

| | |
|---|---|
| *ESHWAR VISWANATHAN* | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**